Koviloor Digital Library

பயன் தரும் பதிகங்கள்

A. No. 18090.
Q1: 4173

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/5

KOVILOOR ANDAVAR
A. No. 18090
LIBRARY, KOVILOOR

பயன் தரும் பதிகங்கள்

அன்புடன்

மெ.செ.அ.மெ.பழ.

பழனியப்பன்—தெய்வானை

Koviloor Digital Library

Koviloor Digital Library

சரணம்

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி' (மந்திரங்கள்) என்று அருளாளர்கள் பலர் பாடிய தெய்வமணம் கமழும் திருப்பதிகங்களைப் போற்றுகிறோம். பன்னிரு திருமுறைப் பதிகங்கள், அதிலும் குறிப்பாக நால்வரும் பாடியருளிய முதல் எட்டுத் திருமுறைகளான தேவாரமும் திருவாசகமும் முற்றிலும் மந்திர ஆற்றல் நிரம்பிய பதிகங்கள்.

ஒலியின் சிறப்பையும் ஆற்றலையும் அன்றே நம் முன்னோர் அறிந்திருந்தனர். ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட அதிர்வு அலை (Frequency) உண்டாகி, ஒலிஅலைகளாகப் பரிணமிக்கிறது. இந்த ஆற்றலை அறிந்த அவர்கள் பல அதிர்வு அலைகளை உடைய, பல்வேறு எழுத்துக்களை ஒன்று சேர்ப்பது/கோவைப்படுத்துவதன் மூலம் பல புதிய அதிர்வலைகளை உடைய சொற்களை / சொற் கூட்டங்களைத் தோற்றுவித்தனர். தூய்மைப்படுத்தும் அல்லது விரும்பிய சில விளைவுகளை உண்டாக்கவல்ல ஆற்றலுடைய ஒலிக்கூட்டங்களை அநுபவத்தில் கண்டறிந்து, உண்டாக்கி, அவற்றின் பயன்தரு ஆற்றல்

Koviloor Digital Library

காரணமாக அவற்றை மந்திரங்கள் (அல்லது ஆற்றல் மறைந்துள்ள மொழி/மறைமொழி) என்றழைத்தனர்.

இப்படிக் கோவைப்படுத்திய ஒலி/சொற்கூட்டங்கள் புதிய வடிவும், ஆற்றல் பெருக்கமும் உடையன வாகின்றன.

இப்படியான ஆற்றல் நிரம்பப்பெற்ற சொற் கூட்டங்களை உடைய பாடல்களை ஓயாமல் திரும்பத் திரும்பச் சொல்கின்றவர்களும், ஜபிக்கின்றவர்களும் அந்த ஆற்றலைத் தாமும் பெற்றுவிடுகின்றனர் என்பதே உண்மை.

விஞ்ஞானம் அறிந்த மெய்ஞ்ஞானிகளான நம் முன்னோர்கள் ஒலிகளை அடிப்படையாகக் கொண்டு, மந்திரச் சொற்களை தொடர்ந்து ஜபிப்பதன்/சொல்வதன் மூலம் ஆற்றல் மிகுகின்ற ஒலி அதிர்வலைகளினால் ஏற்படுகின்ற பயனை நாம் பெற இப்பதிகங்களைப் பாடிச் சென்றுள்ளனர்.

அறிந்தோ அறியாமலோ மின்சார விசையிற் (Switch) கை வைத்தால் எப்படி மின் விளக்கு ஒளிதரத் தொடங்கி வெளிச்சம் தருகிறதோ, அப்படியே பொருள் அறிந்து படித்தாலும், அறியாமல் உச்சரிப்பு

Koviloor Digital Library

சுத்தமாகப் படித்தாலும் அந்த ஒலி அதிர்வலைக் கூட்டங்கள் உரிய ஆற்றலை/பயனை நமக்குத் தரத்தான் செய்யும்.

எனவே தான் பதிகங்கட்கு பொழிப்புரை, பதவுரை-ஏன், அரும்பத உரை கூட - தராது இங்கே தந்துள்ளோம். ஆனால் பல முறை திரும்பத் திரும்பப் படித்தால் தானாகவே எளிதில் பொருள் புரிந்துகொள்ள உதவியாக கூடியவரை சொற்களைப் பிரித்து எளிதாக்கித் தந்துள்ளோம்.

இப்பதிகங்களைப் படிக்கக் குறிப்பிட்ட காலம், நேரம், இடம், திசை, மடி, ஆசாரம் என்று எதுவுமே பார்க்க வேண்டியதே இல்லை என்பதுதான் இவற்றின் சிறப்பு. இவற்றை நிறைந்த நம்பிக்கையுடனும், மன உறுதியுடனும் தினந்தோறும் படியுங்கள். நீங்கள் விரும்பியது அனைத்தும் நிறைவேறும். படிக்கப் படிக்க, அதனால் இயற்கையாக, தானாகவே ஏற்படும் மன அமைதியாலும், மகிழ்ச்சியாலும் உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் அற்புதங்கள் நிகழும். இது சத்தியவாக்கு; ஆம். அப்படியான அற்புதங்களை அநுபவித்ததனால்,

Koviloor Digital Library

இதனை உங்களிடமும் பகிர்ந்துகொண்டு, நீங்களும் பயனடையச் செய்ய விரும்பியதன் வெளிப்பாடே இச்சிறு நூற்காணிக்கை.

"நின் அடி அலால் அடைசரண்
உடையரோ, அடியாரே!" - *சம்பந்தர்*

நாமும் இந்த அற்புதப் பயன் தரும் பதிகங்களை, நினைத்ததை நடத்தித்தரும் மந்திர சக்தி நிறைந்த பாமாலைகளை ஓதி உணர்ந்து அவன் அடி சரணடைவோம்; பயன் அடைந்து ஆனந்தம் பெற்றிடுவோம் எந்நாளும், எப்போதும், எங்கும், எதிலும்.

11-1-2014

கம்பன் அடிசூடி

'சாயி',IE, செட்டிநாடு டவர்ஸ்
5, வள்ளுவர் சாலை,
சுப்பிரமணியபுரம் வடக்கு,
காரைக்குடி-630 002
94450 22137
msampala@yahoo.com

Koviloor Digital Library

பிள்ளையார் வணக்கம்

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்; - உருவாக்கும்;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

- *கபிலர்*

(பதினோராம் திருமுறை)

விளக்கு ஏற்றும் போது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

- *திருநாவுக்கரசர்*

(நான்காம் திருமுறை)

Koviloor Digital Library

உள்ளே .....

பக்க எண்

1. செல்வம் பெருக 1

2. பொன் கிடைக்க 5

3. திருமணம் நடைபெற 9

4. குழந்தைச் செல்வம் பெற 12

5. வழக்குகளில் வெற்றிபெறவும், தொழில், வியாபாரத்தில் வருவாய் பெருகவும் 18

6. என்றும் உணவு கிடைக்க 21

7. எடுத்த காரியம் நிறைவேற 24

8. களவுபோன பொருள் கிடைக்க 28

9. மன நிம்மதி உண்டாக 32

Koviloor Digital Library

1. செல்வம் பெருக

(திருஞான சம்பந்தர் தேவாரம் - மூன்றாம் திருமுறை)

சம்பந்தர் தல யாத்திரையாக திருவாவடுதுறையை அடைந்தபோது, அவர்தம் தந்தையார் யாகம் செய்யப் பொருள் வேண்டுகிறார். உடனே 'இடரினும் தளரினும்' என்று தொடங்கும் பதிகம் பாட, சிவபெருமான் பூதகணம் மூலம் ஆயிரம் பொற்காசுகளைப் பலிபீடத்தில் வைத்தருள யாகம் நிறைவேறியது. இப்பதிகத்தை நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஓதி வந்தால் செல்வம் தட்டுப்பாடின்றி வந்து கொண்டேயிருக்கும் என்பது பலர் பெற்ற அனுபவமாகும்.

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அ(ல்)லேன்
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இள மதிவைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 2

Koviloor Digital Library

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறும் கொன்றைப் போதுஅணிந்த
கனல் எரி அனல்புல்கு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 3

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால் அரற்றாது என்நா
கைமல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறுஉடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 5

Koviloor Digital Library

வெந்துயர் தோன்றிஓர் வெருவுறினும்
எந்தாய் உன்அடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்குஅசைத்த
சந்த வெண் பொடிஅணி சங்கரனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 6

வெப்போடு விரவிஓர் வினைவரினும்
அப்பா! உன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருஅழிய
அப்படி அழல் எழ விழித்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 7

பேர்இடர் பெருகி ஓர் பிணிவரினும்
சீர்உடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்
ஏர்உடை மணிமுடி இராவணனை
ஆர்இடர் படவரை அடர்த்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 8

Koviloor Digital Library

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நா
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்ப அரிதாயவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தா! உன் அடி அலால் அரற்றாது என்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பக்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 10

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலைவல்லார்

வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலைஇலரே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

2. பொன் கிடைக்க

(சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை)

"மெய்யை முற்றப் பொடி பூசி" என்ற பதிகத்தை திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்றார். இதே போல், சுந்தரர் 'நெய்யும் பாலும்' என்று தொடங்கும் பதிகத்தை காஞ்சிபுரம் அருகில் உள்ள திரு ஓண காந்தன் தளியில் பாடிப் பொன் பெற்றார்; இந்தப் பதிகங்களைப் பாடி, தம் தேவைக்கான பொன் கிடைக்கப் பெற்றது பலர் கண்ட அநுபவ உண்மை.

மெய்யை முற்றப் பொடிப்பூசியோர் நம்பி
வேதம் நான்கும் விரித்தோதியோர் நம்பி
கையிலோர் வெண்மழு ஏந்தியோர் நம்பி
கண்ணும் மூன்றுஉடையாய் ஒரு நம்பி
செய்ய நம்பி சிறுசெஞ்சடை நம்பி
திரிபுரம் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 1

திங்கள் நம்பி முடிமேல் அடியார்பால்
சிறந்த நம்பி பிறந்த உயிர்க்கெல்லாம்
அங்கண் நம்பி அருள்மால் விசும்பாளும்
அமரர் நம்பி குமரன்முதல் தேவர்

Koviloor Digital Library

தங்கள் நம்பி தவத்துக்கு ஒரு நம்பி
தாதை என்றுன் சரண்பணிந்து ஏத்தும்
எங்கள் நம்பி எனை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 2

வருந்த அன்று மதயானை உரித்த
வழக்கு நம்பி முழக்கும் கடல்நஞ்சம்
அருந்தும் நம்பி அமரர்க்கு அமுதுஈந்த
அருளென் நம்பி பொருளால் வருநட்டம்
புரிந்த நம்பி புரிநூலுடை நம்பி
பொழுதும் விண்ணும் முழுதும் பலவாகி
இருந்த நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 3

ஊறு நம்பி அமுதா உயிர்க்கெல்லாம்
உரிய நம்பி தெரியஅம்மறை அங்கம்
கூறும் நம்பி முனிவர்க்கு அருங்கூற்றைக்
குமைந்த நம்பி குமையாப் புலன்ஐந்தும்
சீறு நம்பி திருவெள்ளடை நம்பி
வெங்கண் வெள்ளைச் செழுங்கோட்டு எருது என்றும்
ஏறு நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 4

Koviloor Digital Library

குற்ற நம்பி குறுகார் எயில்மூன்றைக்
குலைத்த நம்பி சிலையா வரைகையில்
பற்றும் நம்பி பரமானந்த வெள்ளம்
பணிக்கும் நம்பி எனப்பாடுதல் அல்லால்
மற்று நம்பி உனக்கு என்செயவல்லேன்
மதியிலேன் படும் வெந்துயர் எல்லாம்
எற்று நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 5

அரித்த நம்பி அடிகை தொழுவார்நோய்
ஆண்ட நம்பி முன்னை ஈண்டுஉலகங்கள்
தெரித்த நம்பி ஒருசேவுடை நம்பி
சில்பலிக்கு என்று அகந்தோறும் மெய்வேடம்
தரித்த நம்பி சமயங்களின் நம்பி
தக்கன்தன் வேள்விபுக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே 6

பின்னை நம்பும் புயத்தான் நெடுமாலும்
பிரமனும் என்றிவர் நாடியும் காணா
உன்னை நம்பி ஒருவர்க்கு எய்தலாமே
உலகு நம்பி உரைசெய்யும்அது அல்லால்
முன்னை நம்பி பின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனையும் தொகுத்து ஆண்டது
என்னை நம்பி எம்பிரானாய நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 7

Koviloor Digital Library

சொல்லை நம்பி பொருளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறும் முதலாகிய நம்பி
வல்லை நம்பி அடியார்க்கு அருள்செய்ய
வருந்தி நம்பி உனக்கு ஆட்செய்கில்லார்
அல்லல் நம்பி படுகின்றது என்நாடி
அணங்கு ஒருபாகம் வைத்து எண்கணம் போற்ற
இல்லம் நம்பி இடுபிச்சை கொள்நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 8

காண்டு நம்பி கழற்சேவடி என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆட்செய்கிற்பாரை
ஆண்டு நம்பி அவர்முன்கதி சேர
அருளும் நம்பி குருமாப்பிறை பாம்பைத்
தீண்டும் நம்பி சென்னியில் கன்னிதங்கத்
திருத்தும் நம்பி பொய்ச்சமண் பொருளாகி
ஈண்டும் நம்பி இமையோர் தொழும்நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 9

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

3. திருமணம் நடைபெற

(திருஞான சம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை)

திருமருகல் (நன்னிலம் அருகில்) தலத்தில் ஒரு செட்டிப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நிகழ இருந்த திருமணம் எதிர்பாராத ஒரு காரணத்தினால் தடைப்பட, "சடையாய் எனுமால்" என்று தொடங்கும் இப்பதிகத்தினைச் சம்பந்தர் பாடி அத்தடை நீங்க, இருவருக்கும் திருமணம் செய்வித்தார்.

இதே பயன் தரும் சம்பந்தரின் மற்றொரு பதிகம் - "அயில் ஆரும் அம்பு அதனால்" என்று தொடங்கும். திருமணஞ்சேரியில் (மயிலாடுதுறை - குத்தாலம் அருகில்) பாடிய பதிகமாகும். திருமணஞ்சேரியில், எந்த ஒரு விதிவிலக்கும் இல்லாது நித்தம் நிகழும், திருமணம் கை கூடச் செய்யும் வழிபாடு சர்வ நிச்சயமாய்ப் பயன் தருவது கண்கூடு. இந்த வழிபாடு நிகழும் சந்நிதியாகிய கோகிலாம்பாள் உடனாய மணக்கோல நாதரின் (கல்யாண சுந்தரர்) அற்புதத் திருமேனிக் காட்சி நிழற்படமே இந்நூலின் முன் அட்டையை அலங்கரிக்கின்றது. திருமணம் கை கூட விரும்புவோர் இப்படத்தையே கொண்டுபோய் உங்கள் வழிபாட்டு (பூசை) அறையில் வைத்து வழிபடத் தொடங்குங்கள்; திருமணத்திற்கு வழி உடனே பிறக்கும் என்பது அநுபவத்தில் பலர் கண்ட உண்மை.

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 1

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல் வாய்அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. 6

Koviloor Digital Library

வழுவாள் பெருமான் கழல் வாழ்கஎனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்க விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாததொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே. 9

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறி அல்லன செய்தனர் நின்று உழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார்குழலி நிறை நீக்கினையே. 10

வயன்ஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடிஉள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

4. குழந்தைச் செல்வம் பெற

(திருஞான சம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை)

திருஞானசம்பந்தர் திருவெண்காடு (சீர்காழி, காவிரிப்பூம்பட்டிணம் அருகில்) என்ற தலத்தில் பாடிய வரலாற்றுச் சிறப்புடைய பதிகம்.

திருப்பெண்ணாகடத்தில் (பெண்ணாடம்) அச்சுத களப்பாளர் என்ற சிவநேயச் செல்வர் நீண்ட நாள் குழந்தைப் பேறு இன்றி, வருந்தி, தம் ஆசாரியரிடம் வேண்ட, அவர் திருமுறைகளில் கயிறு சாத்திப் பார்க்க, இப் பதிகத்தின் இரண்டாவது பாடலான 'பேய் அடையா' என்று தொடங்கும் பாடல் வந்தது. அப்பாடலில் கண்டபடி திருவெண்காடு சென்று முக்குள (சூரிய, சந்திர, அக்னி தீர்த்தங்கள்) நீரில் நீராடி வழிபாடு செய்து மெய்கண்டார் என்ற ஆண் குழந்தையைப் பெற்றார். இந்த மெய்கண்டார் தான் 'சிவஞான போதம்' அருளிச் செய்து, திருக்கயிலாய பரம்பரையைத் தமிழ் நாட்டில் தோற்றுவித்து, சைவ சித்தாந்த மெய்ந்நெறியை உலகிற்கு உணர்த்திய முதல் புறச்சந்தான (தமிழ் நாட்டில் தோன்றிய) சமயக் குரவர் ஆவார்.

இவ்வற்புதப் பதிகத்தைப் பாராயணம் செய்து தினந்தோறும் ஓதி, திருவெண்காடு சென்று முக்குள நீரில் தீர்த்தமாடி வெண்காடு மேவிய இறைவனை வழிபாடு செய்து வணங்கி குழந்தைப் பேறு பெற்றவர்கள் அநேகர்.

Koviloor Digital Library

கண்காட்டும் நுதலானும்,
கனல் காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும்,
பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும்,
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடை காட்டும் கொடியானே 1

பேய் அடையா பிரிவு எய்தும்
பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர்
ஐயுற வேண்டா ஒன்றும்
வேய்அன தோள் உமை
பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர்
தம்மைத் தோயவாம் தீ வினையே 2

மண்ணோடு நீர், அனல்,
காலோடு ஆகாயம் மதி இரவி
எண்ணில் வரும் இயமானன்
இகபரமும் எண்திசையும்

Koviloor Digital Library

பெண்ணினொடு ஆண்.
பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்காடு
இடமா விரும்பினனே 3

விடமுண்ட மிடற்று அண்ணல்
வெண்காட்டின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை
மலர்நிழலைக் குருகு என்று
தடமண்டு துறைக்கெண்டை
தாமரையின்பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்த
நகை காட்டும் காட்சியதே 4

வேலைமலி தண்கானல்
வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு
நன் மறையவன்தன்
மேல் அடர், வெம்காலன், உயிர்,
விண்டபி(ன்)னை நமன் தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று
அடர அஞ்சுவரே

Koviloor Digital Library

தண் மதியும் வெய்யரவும்
        தாங்கினான் சடையினுடன்
ஒண் மதியநுதல் உமைஓர் கூறு
        உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம்
        பலஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல்
        வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம் மாற்கு ஈந்தானும்
        சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும்
        அடைந்த அயிராவதம் பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும்
        வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும்
        முக்கண் உடை இறைவனே 7

பண்மொய்த்த இன்மொழியாள்
        பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று
        அருள் செய்தான் உறைகோவில்

Koviloor Digital Library

கண் மொய்த்த கருமஞ்ஞை
நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில் வரிவண்டு
இசை முரலும் வெண்காடே 8

கள்ளார் செங்கமலத்தான்
கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஓடி உயர்ந்து
ஆழ்ந்தும் உணர்வு அரியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு
வெண்காட்டான் என்று
உள்ளாடி உருகாதார்
உணர்வுடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள்
மிண்டு மொழிபொருள் என்னும்
பேதையர்கள் அவர், பிரிமின்.
அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர் வியன்
திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது
இலர் என்று உணருமினே. 10

Koviloor Digital Library

தண்பொழில் சூழ் சண்பையர் கோன்
தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி
விகிர்தன் உறை வெண்காட்டை
பண்பொலி செந்தமிழ் மாலை
பாடிய பத்து இவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்து அவர்போய்
வான் பொலியப் புகுவாரே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

5. வழக்குகளில் வெற்றி பெறவும், தொழில், வியாபாரத்தில் வருவாய் பெருகவும்

(திருஞான சம்பந்தர் தேவாரம் - முதல் திருமுறை)

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழி மிழலைக்குச் (திருவாரூர் - பேரளம் - பூந்தோட்டம் அருகில்) சென்ற போது அங்கு நிலவிய பஞ்சத்தைப் போக்கி உணவு அளிக்க வேண்டி வீழி மிழலை ஈசனை வழிபட, அவரும் பஞ்சம் தீரும் வரையில் கோயிலில் இருக்கும் பலி பீடத்தில் கிழக்கிலும், மேற்கிலுமாக ஒவ்வொரு பொன் படிக்காசு வைத்தருளினார்.

சம்பந்தருக்குக் கிடைத்த பொற்காசு சற்று மாற்றுக் குறைவாக (வாசியுடையதாக) இருந்ததால், அதனை மாற்றி உணவிட சற்றுக்கால தாமதமாயிற்று, அதுபோது, தனக்கும் மாற்றுக் குறைவில்லாத காசை அருளும்படி இப்பதிகத்தைப் பாட, உடனே அவருக்கும் நல்ல காசு கிடைத்தது; தாமதமின்றி உணவு வழங்கினார்.

இப்பதிகத்தை ஓதி மிகவும் சோதனையான வழக்குகளில் கூட வெற்றி பெற்றவர்கள் பலர்; தொழில், வியாபாரங்களில் மேன்மேலும் வருவாய் பெருகக் கண்டவர்கள் பலர்; கடன் கொடுத்த பணம்

Koviloor Digital Library

திரும்பக் கிடைக்கவும், பல காலம் திரும்பி வராத பொருள் மீண்டும் வரவும் பயன் தரும் பதிகம் இது.

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசல் இல்லையே 1

இறைவர் ஆயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே 2

செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே 3

நீறுபூசினீர், ஏற தேறினீர்
கூறுமிழலையீர், பேறும் அருளுமே 4

காமன்வேவஓர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம் நல்குமே 5

பிணிகொள் சடையினீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண்டு அருளுமே 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே 7

Koviloor Digital Library

அரக்கன் நெரிதர, இரக்கம் எய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே 8

அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர், பயனும் அருளுமே 9

பறிகொள் தலையினார், அறிவது அறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவது அரியதே 10

காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

6. என்றும் உணவு கிடைக்க

(திருநாவுக்கரசர் தேவாரம் - ஐந்தாம் திருமுறை)

திருநாவுக்கரசர் தில்லையில் (சிதம்பரத்தில்) பாடியருளிய இப்பதிகம் மகேசுவர பூசையின் போது பாடப்பெற்று வருகிறது. பூசையின் போது மட்டுமின்றி, தினமும் உணவு உட்கொள்ளு முன்னர் ஓத, உணவு தட்டுப்பாடின்றி, எவ்விதத்திலாவது கிடைக்க வழி செய்யும் அற்புதப் பயன் தரும் பதிகம்.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே 1

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம் பிரானையே 2

அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றக் கிடந்தார் என்று அயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனம்
திருச்சிற்றம்பலஞ் சென்று அடைந்து உய்மினே 3

Koviloor Digital Library

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பன் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர்பால் அணுகான் செறு காலனே. 6

ஒருத்தனார் உலகங்கட்கு ஒரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்தனார் இளையார் விடமுண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே 7

விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்
துள் நிறைந்து நின்றாடும் ஒருவனே 8

Koviloor Digital Library

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந்திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே 9

நாடி நாரணன் - நான்முகன் என்றிவர்
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்
தாடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடிபத்து இற
மதி கொள் சேவடி சென்றடைந்து உய்மினே 11

திருச்சிற்றம்பலம்

KOVILOOR ANDAVAR LIBRARY
A. No. 18090

Koviloor Digital Library

7. எடுத்த காரியம் நிறைவேற

(திருஞான சம்பந்தர் தேவாரம் - மூன்றாம் திருமுறை)

சம்பந்தர் திருஆலவாயில் (மதுரை) சமணர்களுடன் வாதிடுவதற்குப் புறப்படும் பொழுது சொக்கநாதரை வணங்கி இப்பதிகம் பாடி சமணர்களை (அனல்வாதம், புனல்வாத) போட்டியில் வென்றார். எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும், அது எளிதே, இனிதே நிறைவேறிட இப்பதிகம் பயன் தரும்.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாது உடனாய பரமனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 1

வைதிகத்தின் வழி ஒழு காதஅக்
கைதவம் உடைக் காரமண் தேரரை
எய்தி வாது செயத் திருவுள்ளமே
மைதிகழ் தரு மாமணி கண்டனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 2

Koviloor Digital Library

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாது செயத் திருவுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 3

அறுத்த அங்கம்ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ்அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாது செயத் திருவுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 4

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாது செயத் திரு வுள்ளமே
வெந்த நீறது அணியும் விகிர்தனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 5

Koviloor Digital Library

வேட்டு வேள்வி செயும் பொருளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாது செயத் திருவுள்ளமே
காட்டில் ஆனை உரித்தஎங் கள்வனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 6

அழலது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறம்
கழல வாது செயத் திருவுள்ளமே
தழல் இலங்கு திருவுருச் சைவனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 7

நீற்று மேனியர் ஆயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாது செயத் திருவுள்ளமே
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினாய்

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 8

Koviloor Digital Library

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாது செயத் திருவுள்ளமே
மாலும் நான்முகனுங் காண்ப அரியதோர்
கோல மேனியது ஆகிய குன்றமே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 9

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாது செயத் திருவுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே 10

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல்மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

8. களவு போன பொருள் கிடைக்க

(சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாருடன் பல தலங்களை வழிபட்டு, விடைபெற்று திருவாரூர் நோக்கி வருகின்றார். சேரமான், நவமணிகள், பொன், முத்துக்கள் ஆகியவற்றை ஏவலாளர் தலையின் மீது ஏற்றி உடன் அனுப்புகின்றார். வழியில் திருமுருகன் பூண்டி (திருப்பூர் அருகில்) அருகில் சிவபெருமான் பூதகணங்களை வேடர்களாக்கி அந்த மூட்டைகளைக் கவர்ந்து வரச் செய்கிறார். சுந்தரர் திருமுருகன் பூண்டி ஆலயத்திற்குள் சென்று இப்பதிகம் பாட, எல்லாப் பொருள்களையும் சிவபெருமான் திரும்ப அளிக்கின்றார்.

இப்பதிகத்தை முழு நம்பிக்கையுடன் பாராயணம் செய்து, களவு போன பொருட்களை மீண்டும் பெற்றவர் பலப் பலர்.

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்டு
ஆறலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னோடும்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 1

Koviloor Digital Library

வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியுங்
கூறை கொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
எல்லை காப்பதொன்று இல்லையாகில் நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 2

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்றறியார்
உசிர்க் கொலை பல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர் வாழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டு நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 3

பீறற்கூறை உடுத்தோர் பத்திரங்
கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கியர் ஆகி நாள்தொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
ஏறு கால் இற்றது இல்லையாய்விடில்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 4

Koviloor Digital Library

தயங்கு தோலை உடுத்து சங்கரா
    சாம வேதம் ஓதி
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும்
    மார்க்கம் ஒன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு
    முருகன் பூண்டி மாநகர்வாய்
இயங்கவும் மிடுக்குடையராய் விடில்
    எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 5

விட்டிசைப்பன கொக்கரை கொடு
    கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடும்இத் துந்துமியொடு
    குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங் கமழ் முருகன்
    பூண்டி மாநகர்வாய்
இட்டபிச்சை கொண்டு உண்பதாகில் நீர்
    எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 6

வேதம் ஓதி வெண்ணீறு பூசி வெண்
    கோவணந் தற்றயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும்
    முத்தி நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளு முருகன்
    பூண்டி மாநகர்வாய்
ஏதுகாரணம் ஏதுகாவல் கொண்டு
    எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 7

Koviloor Digital Library

படஅரவு நுண்ணேரிடைப் பணைத்
    தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமை நங்கை தன்னையோர்
    பாகம் வைத்து உகந்தீர்
முடவர் அல்லீர் இடர்இலீர் முருகன்
    பூண்டி மாநகர்வாய்
இடவம் ஏறியும் போவதாகில் நீர்
    எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 8

சாந்தமாக வெண்ணீறு பூசி வெண்
    பல்தலைகலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர்
    பாகம் வைத்து உகந்தீர்
மோந்தை யோடு முழக்கறா முருகன்
    பூண்டி மாநகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கை தன்னொடும்
    எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே 9

முந்திவானவர் தாம்தொழும் முருகன்
    பூண்டி மாநகர்வாய்
பந்தணை விரற் பாவை தன்னையோர்
    பாகம் வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூரன்
    உரைத்தன பத்துங்கொண்டு
எந்தம் அடிகளை ஏத்துவார் இடர்
    ஒன்றுந்தாம் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

9. மன நிம்மதி உண்டாக

(மாணிக்கவாசகர் - திருவாசகம்)

மணிவாசகர் பாடியருளிய திருவாசகத்தில் முதல் பாடல் சிவபுராணம், திருப்பெருந்துறையில் (ஆவுடையார் கோயில்) சிவபெருமானே குருவாக வந்து குருந்த மரத்தடியில் அருள் பாலித்ததும், மணிவாசகர் சிவனருள் கிட்டிய ஆனந்தத்தில் பாடிய அற்புதப் பதிகம்.

திருக்கோயில் வழிபாட்டின் போதும், கோயில் வலம், வீதி வலம், கிரி வலம், மகேசுவர பூசை முதலியவற்றின் போதும் ஓத எல்லையற்ற மன நிம்மதி கிடைக்கும். இல்லங்களிலும் நித்தம் ஓதி உணர்ந்து உருகினால் குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்கள், மனக் கவலைகள் ஒழிந்து அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். வீட்டில் லெட்சுமி கடாட்சம் உண்டாகும்.

நமச்சிவாய வாஅழ்க!
    நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
    நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட
    குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று
    அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன். அநேகன்,
    இறைவன் அடிவாழ்க!

Koviloor Digital Library

வேகம் கெடுத்து ஆண்ட
வேந்தன் அடிவெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன்
பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன்
பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவார் உள்மகிழும்
கோன்கழல்கள் வெல்க!
சிரம்குவிவார் ஓங்குவிக்கும்
சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி!
எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி!
சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற
நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும்
மன்னன் அடிபோற்றி!
சீர் ஆர் பெருந்துறைநம்
தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம்
அருளும் மலைபோற்றி!
சிவன் அவன்என் சிந்தையுள்
நின்ற அதனால்,

Koviloor Digital Library

அவன்அரு ளாலே
அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச்
சிவபுரா ணம் தன்னை
முந்தை வினைமுழுதும்
ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணைக்
கண்காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா
எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்தும் மண்நிறைந்தும்
மிக்காய்! விளங்குஒளியாய்!
எண்இறந்து எல்லை
இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன்
புகழும்ஆறு ஒன்று அறியேன்

புல்ஆகிப், பூடுஆய்ப்,
புழுஆய், மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப்
பறவை ஆய்ப் பாம்பு ஆகிக்
கல்ஆய், மனிதர்ஆய்ப்,
பேய்ஆய்க், கணங்கள் ஆய்,
வல்அசுரர் ஆகி,
முனிவர்ஆய்த் தேவர் ஆய்ச்
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்

Koviloor Digital Library

எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேஉன் பொன் அடிகள்
கண்டு இன்று வீடுஉற்றேன்
உய்யஎன் உள்ளத்துள்
ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா! விமலா!
விடைப்பாகா! வேதங்கள்
“ஐயா” என ஓங்கி
ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய்! தண்ணியாய்!
இயமானன் ஆம்விமலா!
பொய்ஆ யினஎல்லாம்
போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன்
இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை
அகல்விக்கும் நல்அறிவே!

ஆக்கம் அளவுஇறுதி
இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய்! காப்பாய்!
அழிப்பாய்! அருள்தருவாய்!
போக்குவாய்! என்னைப்
புகுவிப்பாய் நின்தொழும்பில்!

Koviloor Digital Library

நாற்றத்தின் நேரியாய்!
சேயாய்! நணியானே!
மாற்றம் மனம்கழிய
நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு
நெய்கலந்தால் போலச்
சிறந்துஅடியார் சிந்தனையுள்
தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும்
எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்துஉடையாய்!
விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்!
வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய
மாய இருளை
அறம்-பாவம் என்னும்
அரும்கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும்
புழு அழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது
வாயில் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும்
வஞ்சனையைச் செய்ய

Koviloor Digital Library

விலங்கு மனத்தால்,
விமலா! உனக்குக்
கலந்த அன்பு ஆகிக்
கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத
சிறியேற்கு நல்கி,
நிலம்தன்மேல் வந்தருளி,
நீள்கழல்கள் காஅட்டி,
நாயில் கடையாய்க்
கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த
தயாஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி!
மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர்
அமுதே! சிவபுரனே!
பாசம்ஆம் பற்று அறுத்துப்
பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து,
நெஞ்சில்வஞ் சம்கெடப்

Koviloor Digital Library

பேராது நின்ற
பெரும்கருணைப் பேர்ஆறே!
ஆரா அமுதே!
அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து
ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன்
ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும்
இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே!
யாவையும்ஆய், அல்லையும் ஆம்
சோதியனே! துன்இருளே!
தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம்
நடுஆகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட
எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால்
கொண்டுஉணர்வார்தம் கருத்தின்

நோக்குஅரிய நோக்கே!
நுணுக்குஅரிய நுண்உணர்வே
போக்கும், வரவும்,
புணர்வும்இலாப் புண்ணியனே!

Koviloor Digital Library

காக்கும்எம் காவலனே!
காண்புஅரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே!
அத்தா! மிக்கு ஆய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்!
சொல்லாத நுண்உணர்வாய்!

மாற்றம்ஆம் வையகத்தே
வெவ்வேறே வந்துஅறிவாம்
தேற்றனே! தேற்றத்
தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர்
அமுதே! உடையானே !
வேற்று விகார
விடக்குஉடம்பின் உள்கிடப்ப,
ஆற்றேன், "எம் ஐயா!
அரனேஓ!" என்றுஎன்று

போற்றிப் புகழ்ந்துஇருந்து,
பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டுஇங்கு வந்து
வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பைக்
கட்டுஅழிக்க வல்லானே!

Koviloor Digital Library

நள்இருளில் நட்டம்
பயின்றுஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே!
தென்பாண்டி நாட்டானே!

அல்லற் பிறவி
அறுப்பானே! ஓஎன்று
சொல்லற்கு அரியானைச்
சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின்
பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்
உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்
பணிந்து.

திருச்சிற்றம்பலம்

KOVILOOR LIBRARY KOVILOOR
A. No. 18090

Koviloor Digital Library

Koviloor Digital Library